05-08-2014 Dinakaran




சென்ட்ரல் ரயில் நிலைய நடைமேம்பாலத்தை பயன்படுத்த வேண்டும் என விழிப்புணர்வு பிரசுரங்களை பயணிகளுக்கு வழங்குகின்றனர் ரயில்வே போலீசார்.

## சென்ட்ரல் ரயில் நிலைய

# நடை மேம்பாலத்தை பயன்படுத்த பிரசாரம்

சென்னை, ஆக. 5: எழும்பூரில் இருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருந்து பாரிமுனை செல்லும் வாகனங்கள் சென்ட்ரல் ரயில் நிலையம் வழியாக செல்கின்றன. அதனால் ரயில்நிலைய வளாகத்தில் உள்ள சாலையை, ரயில் பயணிகள் கடக்க வசதியாக 20 லட்ச ரூபாய் செலவில் தற்காலிக நடை மேம்பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. சுமார் 100 அடி தொலைவை அதாவது குறைந்தபட்ச தொலைவை கடக்க தற்காலிக மேம்பாலத்தை யாரும் பயன்படுத்துவதில்லை.

இந்த பாலத்தில் ஏறி, இறங்கி, ஏறி என மலைப்பயணம் போல் இருப்பதால் நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் பெரிதும் அவதிக்குள்ளாகி உள்ளனர். இருப்பினும் மற்ற பயணிகள் பயன்படுத்தினால் விபத்துகளை தடுக்கலாம் என்பதால் ரயில்வே பாதுகாப்பு படையினர் நேற்று விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

அப்போது இன்ஸ்பெக்டர்கள் அழகர்சாமி, திலீப் ஆகியோர் தலைமையில் ரயில்வே பாதுகாப்பு படையினர் நேற்று மாலை தற்காலிக நடைமேம்பாலத்தை பயன்படுத்த வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி ரயில் பயணிகளுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கினர். மெகாபோன் மூலம் அறிவிப்பு செய்தனர். அது மட்டுமின்றி விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.